கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 22/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ராமலிங்கம் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 17.12.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 2017 ல் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும் போது நான்கு புற எல்லைக்கற்கள் இருந்ததா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற பின்னிட்டு எனது இடத்தை அளக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் இடத்தை அளக்காமலே எவ்வாறு எனது கிரைய சொத்தை அடையாளம் கண்டுக்கொண்டேன் என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். நான் கிரையம் வாங்கும் போது கிழக்கிலும் தெற்கிலும் வேலி இருந்ததா என்றால் இல்லை. வீடுகள் இருந்தது. நான் கிரையம் வாங்கிய சொத்தில் வீடுகள் இல்லை என்றால் சரிதான். வாதி சொத்தில் பழைய வீடு இருந்தது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பின்னிட்டு பட்டா மாற்றியுள்ளேனா என்றால் மாற்றிக்கொண்டேன். பட்டா மாற்றிக்கொள்வதற்கு முன்பு நான் எனது நிலத்தை அளந்தேனா என்றால் எனது மகனுக்கு தான் தெரியும். எனக்கு தெரியவில்லை.

2. வாதி நிலம் கிரையம் பெற்றவுடன் என்னிடம் நிலத்தை அளந்து கொள்ளலாம் என கேட்டாரா என்றால் இல்லை. நான் கட்டிடம் கட்டும போது இடத்தை அளந்த பின்னிட்டு கட்டிடம் கட்டுங்கள் என்று சொன்னாரா என்றால் நான் கட்டிடம் கட்டிய போது அவர் நிலம் கிரையம் வாங்கவில்லை. நான் கட்டிடம் கட்டும் போது எனக்கும் வாதிக்கும் தகராறு வந்ததா என்றால் இல்லை. வாதி சென்னை உயர்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக நீதிபேராணை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை., நீதிபேராணை தாக்கல் செய்த போது எனது வழக்கு அ.வ.எண்.228/2017 நிலுவையில் இருந்ததா என்றால் எனது நிலத்தில் பிரச்சனை செய்ததால் நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்த நீதிபேராணையில் ஆஜராகி அ.வ.எண்.228/2017 நிலுவையில் இருக்கும் விவரத்தை சொன்னதால் மேற்படி நீதிபேராணை தள்ளுபடியானது என்றால் சரியல்ல.

3. அ.வ.எண்.228/2017 ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை

அளவீடு செய்தாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அ.வ.எண்.228/2017 வழக்கு சொத்தையும் இந்த வழக்கின் சொத்தையும் அளவீடு செய்ததில் நான் வாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்த விவரத்தை அறிந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி அறிக்கையின் அடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா C பட்டியல் சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா C பட்டியல் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து தனித்த சுவாதீனம் பெற வாதிக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 22/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 ராமலிங்கம் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.12.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**